# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8066935

1. District : பெரம்பலூர் / மாவட்டம் — PS: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு / காவல்நிலையம் — Year: 2020 / ஆண்டு — FIR No.: 01 / மு.த.அ. எண் — Date: 29.01.2020 / நாள்

2. (i) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: prevention of corruption — Sections பிரிவுகள்: u/s 7 of PC Act
(iii) Act சட்டம்: Act 1988 (as amended in 2018) — Sections பிரிவுகள்: 1988 (as amended in 2018)
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 28.01.2020 — Date from : நாள் முதல் — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை 08.45 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29.01.2020 — Time : நேரம் 08.30hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — கணினியால் தட்டச்சு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 2 K.m. தெற்கு.
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி — தோட்டக்கலைத்துறை ஆய்வு, கலெக்டர் அலுவலகம், பெரம்பலூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — R. சதீஷ்
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — M. [illegible]
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 27/2020
(d) Nationality : நாட்டினம் — இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் — கான்ட்ராக்ட் லேபர்.
(g) Address : முகவரி — 7/74 மேற்கு தெரு, எளம்பலூர் சமத்துவபுரம், [illegible] பஞ்சாயத்து, பெரம்பலூர் (Tk&Dt)

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

ராஜ் என்கிற தேசிங்குராஜ், கலெக்டர் அலுவலகம் தோட்டக்கலைத்துறை அலுவலகம், பெரம்பலூர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் — தாமதமில்லை.
முன் விசாரணை செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டது.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — இல்லை —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — இல்லை —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

28.01.2020 மாலை 18.00 மணிக்கு பெரம்பலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளராகிய நான் அலுவலகத்தில் இருந்தபோது பெரம்பலூர் எறையசமுத்திரத்தை சேர்ந்த R.சதிஸ், த/பெ ராமசாமி, 7/74, மேற்கு தெரு, எறையசமுத்திரம், கல்பாடி பஞ்சாயத்து, பெரம்பலூர் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் பின்வருமாறு:- அனுப்புநர்,R.சதிஷ், த/பெ M.ராமசாமி, 7/74, மேற்கு தெரு, எறையசமுத்திரம், கல்பாடி பஞ்சாயத்து, பெரம்பலூர்-(TK & DT) பெறுநர், இன்ஸ்பெக்டர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, பெரம்பலூர். ஐயா, நான் பெரம்பலூர் எறையசமுத்திரத்தில் பெற்றோருடன் வசிக்கிறேன். B.E Civil படித்துவிட்டு, பெரம்பலூர் மேற்பார்வையாளர் பொறியாளர் அலுவலக வளாகத்தில் உள்ள மின் வாரிய மின் தடை புகார் மையத்தில் ரூ.5,500/- மாத சம்பளத்தில் காண்ட்ராக்ட் லேபராக வேலை செய்து வருகிறேன். எனக்கு வயது 27 ஆகிறது. எனக்கும் எங்க ஊரை சேர்ந்த, எனது உறவினரான குமார், சாரதா அவர்களின் மகள் ஷாலினிக்கும் பெரியோர்களால் கல்யாணம் நிச்சயம் செய்யப்பட்டது. ஷாலினி B.Sc., நர்சிங் படிக்கிறார். எங்களது கல்யாணம், சிறுவாச்சூர் ஸ்ரீ மதுர காளியம்மன் திருமண மண்டபத்தில் வருகிற

(Separate sheet enclosed)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் ரேகைப் பதிவு

R. Rathinavalli
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
29.01.2020.

Name: பெயர் R. RATHINAVALLI
Rank: நிலை Inspector of Police, Vigilance and Anti-corruption, Perambalur. No. எண் ..........

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

07.02.2020 தேதி நடைபெற உள்ளது. ஷாலினி கல்யாணத்திற்காக அரசால் வழங்கப்படும், மூவாலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவி திட்டத்தில் பண உதவி கேட்டு ஷாலினியின் அம்மா சாரதா நான் தயார் செய்திருந்த விண்ணப்பத்தில் அவர் கையெழுத்து போட்டு அந்த விண்ணப்பத்ததை என்னிடம் கொடுத்து நடவடிக்கைக்காக சம்மந்தப்பட்ட ஆபிஸில் கொடுக்க சொன்னார். நான் அதை வாங்கி, பெரம்பலூர் SR E-service Centre-ல் ரூ.120/- செலுத்தி கடந்த 02.01.2020 தேதி ஆன்லைனில் பதிவு செய்தேன். இந்நிலையில் 27.01.2020 ஆம் தேதி எங்களது கல்யாணம் சம்மந்தமாக ஒரு அம்மா வந்து எங்க ஊரில் விசாரித்ததாகவும், இருவர் வீட்டிலும் அப்போது ஆள் இல்லாததால், தனது செல்போன் நம்பரை 94455 19309 கொடுத்து பேச சொல்லிவிட்டு போனதாகவும் எனது உறவினர் கார்த்திக் என்னிடம் சொல்லி, அந்த போன் நம்பரை கொடுத்தார். நான் மேற்படி 94455 19309 போன் நம்பருக்கு இன்று 28.01.2020 தேதி காலை சுமார் 8.45 மணியளவில் பேசினேன். பேசியவர் தான் ஊருக்கு சாரதா அவர்கள் விண்ணப்பம் சம்மந்தமாக விசாரிக்க வந்ததாகவும், தன்னை ராய் என்றால் எல்லோருக்கும் தெரியும் என்று சொன்னார். மேலும், என்னிடம், சாரதாம்மா ஆன்லைனில் பதிவு செய்த ஒரிஜினல் விண்ணப்பத்தையும், அதனுடன் பணம் ரூபாய் இரண்டாயிரமும் கொண்டுவந்து யூனியன் ஆபிஸில் தன்னிடம் கொடுக்குமாறும் மதியத்திற்கு மேல் என்றால் கலெக்டர் ஆபிஸ் வருமாறு சொன்னார். நான் அதனை உறுதிபடுத்திக் கொள்ள ஒரிஜினல் அப்பிளிகேஷனை மட்டும் எடுத்துக்கொண்டு இன்று மாலை சுமார் 4 மணியளவில் பெரம்பலூர் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள சமுக நலத்துறை ஆபிஸ் போய், அங்கிருந்த ஒருவரிடம் ராய் என்பவர் யார் என்று கேட்டேன், அவர் செர்லின் ராயா என்று சொல்லி ஒருவரை கைகாட்டினார். நான் அவரை போய் பார்த்து, நான்தான் சதிஷ் இன்று காலை உங்களிடம் போனில் பேசியது நீங்க கேட்டபடி சாரதாம்மாவின் ஒரிஜினல் அப்பிளிகேஷனை எடுத்து வந்திருக்கிறேன் என்று சொல்லி அவரிடம் அதனை கொடுத்தேன். அதை அவர் வாங்கி பார்த்துவிட்டு ஒரு ஹேண்ட் பேக்கில் வைத்துக்கொண்டார். என்னை அவர் இருந்த அலுவலகத்தில் இருந்து வெளியே கூட்டி வந்து எங்க நான் கேட்ட பணம் இரண்டாயிரம் என்றார். இப்ப என்கிட்ட பணம் இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் உதவிபணம் கிடைக்க வேண்டுமென்றால், எனக்கு ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தால்தான் கிடைக்கும், இல்லைனா உனக்கு பின்னாடி அப்ளை பண்ணிணவங்களுக்கு கொடுத்துடுவேன் அப்புறம் உனக்கு உதவி பணம் கிடைக்க ஒன்றரை வருசமாகும் என்றார். மேலும் என்னிடம், நீ பணம் கொண்டு வரலேன்னு தெரிஞ்சு இருந்தா இந்த ஒரிஜினல் அப்பிளிகேஷனை உன்கிட்ட இருந்து வாங்கி இருக்கமாட்டேன் என்று சொன்னார். நான் வேற வழியில்லாம அப்போதைக்கு சரின்னு சொன்னேன். அதற்கு அவர், நான் நாளைக்கு காலைல ஷார்ப்பா 10 மணிக்கு பெரம்பலூர் யூனியன் ஆபிஸ்க்கு வந்துட்டு ஒன்றரை மணி நேரம் இருப்பேன் அங்க வந்துடு அதுக்கு மேலனா கலெக்டர் ஆபிஸ் வந்துடு என்று சொன்னார். என்னிடம் அவர் லஞ்சமாக கேட்ட ரூபாய் இரண்டாயிரத்தை அவருக்கு கொடுக்க எனக்கு விருப்பமில்லை. பணம் இரண்டாயிரத்தை ஏற்பாடு செய்து எடுத்து வந்திருக்கிறேன். என்னிடம் லஞ்ச பணம்

கேட்ட சொல்லின் ராய் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஆங்கிலத்தில் ஒப்பம் தேதி 28.01.2020). **SUBMITTED** Sir, Received this computer typed written complaint from the complainant on 28.01.2020 at 18.00 hrs, verified and ascertained its genuineness through sources, and registered a case on the complaint on 29.01.2020 at 08.30 hrs in Perambalur Vigilance and Anti-Corruption Detachment Crime No.01/2020, U/s 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018). (sd) R.Rathinavalli, Inspector of Police, Vigilance and Anti-Corruption, Perambalur. I am submitting the Original F.I.R. along with the complaint to the Hon'ble Court of the Chief Judicial Magistrate/Special Judge, Perambalur and the copies of the F.I.R to all other concerned Officials.

R. Rathinavalli.

(R.Rathinavalli) 29.01.2020.

Inspector of Police,

Vigilance and Anti-Corruption,

Perambalur.